# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.36 நாள்.21.03.2025.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 26.03.2025 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

ooOoo

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 26.03.2025 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில் , நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி
நாள் : 21.03.2024.

# அரக்கோணம் நகராட்சி
# சாதாரணக்கூட்டம்

2025–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26.03.2025–ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அரக்கோணம் நகராட்சியில் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூட்டரங்கில் நகர மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| **திருக்குறள்:** | வேலன்று வென்றி தருவது மன்னவன் கோலதூஉங் கோடா தெனின். |
| **விளக்கம்:** | ஒரு மன்னனுக்கு வெற்றி தருவது வேல் அல்ல , மாறாக அவனது செங்கோல் ஆகும், அதுவும் நேர்மையோடு இருந்தால் என்று கூறுகின்றது. |

**<u>பொருள் எண். 1</u>**

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2024, ஜனவரி 2025 மற்றும் பிப்ரவரி 2025–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண். 2</u>**

அரக்கோணம் நகராட்சியின் 2024–25 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2025–26ஆம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடு (BUDGET) மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.418/2023/பி1)

**<u>பொருள் எண். 3</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் நிதி 2024–2025ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கீழ்காணும் பணிகளுக்கான பணி உத்திரவு 31.03.2025 தேதியுடன் முடிவடைகிறது. எனவே பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், குடிநீர், பணியின் அவசியம் கருதியும் , நிர்வாக நலன் கருதியும், மேற்படி பணிகளுக்கான மறுஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 01.04.2025 தேதி முதல் 30.06.2025 வரை மூன்று மாதங்களுக்கு அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய பணி உத்திரவு வழங்கப்படும் வரை கீழ்காணும் பணிகளை ஏற்கனவே செய்து வரும் இந்நகராட்சி ஒப்பந்ததாரர்களை கொண்டு அதே ஒப்பந்தப்புள்ளி விலைக்கே இப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>2024–25ம் ஆண்டிற்கான தக்கோலம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையத்தில் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் பணிகளை மேற்கொள்ள 9 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் 2 மின் பணியாளர்கள் பெற்று குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ளுதல். | **R.சண்முகம்** |
| 2 | **<u>பொதுநிதி/குடிநீர்</u>**<br>2024–25ம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் பணியாற்ற 6 வால்வு ஆப்ரேட்டர்கள் , 4 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் 2 மின் பணியாளர்கள் ஆகியோர் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் பணி ஆட்களை பெற்று குடிநீர் விநியோக பணிகள் | **V.சதீஷ்குமார்** |

| | | |
|---|---|---|
| 3 | <u>பொதுநிதி/குடிநீர்</u><br>அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு வேலூர் கூட்டு குடிநீர் திட்டம், கல்லாறு மற்றும் தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரக்கோணம் நகருக்கு குடிநீர் பெறப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்திட குடிநீரில் சோடியம் ஹைபோ குளோரைடு கலந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 20242–5ஆம் ஆண்டிற்கு தேவையான சோடியம் ஹைபோ குளோரைடு திரவத்தினை விநியோகம் செய்யும் பணி. | **ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் சென்னை** |
| 4 | <u>பொதுநிதி/குடிநீர்</u><br>அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 14 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மற்றும் கல்லாறு நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளில் இயக்கப்படும் மின்மோட்டார்களை 2024–25 ஆம் ஆண்டில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது பார்த்து இயக்கும் பணி. | **R.சண்முகம்** |
| 5 | <u>பொதுநிதி/குடிநீர்</u><br>அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பகுதிகளில் பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் உடைப்புகளை (Leakage) சரிசெய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2024–25 ஆம் ஆண்டிற்கு பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | **இராஜகோபால்** |
| 6 | <u>பொதுநிதி/குடிநீர்</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள கைப்பம்பு, சிறுமின் விசைப்பம்பு, மற்றும் கழிவறை மின்மாட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | **C.பத்மநாபன்** |

அலுவலக குறிப்பு : குடிநீர் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.123/2024/இ1)

**<u>பொருள் எண். 4</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 14 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளில் இயக்கப்படும் மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை அவ்வபோது உடன் பழுது பார்த்து மோட்டார்களை இயக்கவும் மற்றும் கல்லாறு நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளில் இயங்கப்படும் மின்மோட்டார்கள் அவ்வப்போது பழுது ஏற்படும் போது உடனுக்குடன் பழுது பார்த்து இயக்கவும் 2025–26 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவித்தொகையினை வருவாய்நிதி/குடிநீர்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–மன்றம் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண். 217/இ1/2025)**

**673**

**<u>பொருள் எண். 5</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு வேலூர் கூட்டு குடிநீர் திட்டம், கல்லாறு மற்றும் தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து

அரக்கோணம் நகருக்கு குடிநீர் பெறப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏதுவாக நான்கு இடங்களில் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு குடிநீரில் சோடியம் ஹைபோ குளோரைடு கலந்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி இடங்களில் 2025–26 ஆம் ஆண்டிற்கு தேவையான சோடியம் ஹைபோ குளோரைடு திரவத்தினை விநியோகம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய்நிதி /குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண். 218/இ1/2025) 674**

**<u>பொருள் எண். 6</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பகுதிகளில் பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் உடைப்புகளை (Leakage) சரிசெய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2025–26 ஆம் ஆண்டிற்கு பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சம் பொதுநிதி /குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து பயன்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.219/இ1/2025) 675**

**<u>பொருள் எண். 7</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36வார்டுகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சிறுமின்விசைப்பம்புகள் மற்றும் இந்தியா மார்க் –II கை பம்புகளை பராமரிக்க நகராட்சிகளில் போதிய ஆட்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்படி சிறுமின் விசைப்பம்பு , கைபம்பு மற்றும் கழிவறையில் உள்ள மின் மோட்டார் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், அம்மோட்டார்களை பாரமரிப்பு பணிகள் 2025–26 ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ .15.00 இலட்சம் தொகையினை வருவாய்நிதி/குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள கைப்பம்பு, சிறுமின் விசைப்பம்பு, மற்றும் கழிவறை மின்மாட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 15.00 |
| | மொத்தம் | 15.00 |

**அலுவலககுறிப்பு** :1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய்நிதி/குடிநீர் நிதியிலிருந்து பயன்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 220/இ1/2025) 676**

**<u>பொருள் எண். 8</u>**

அரக்கோணம் நகராட்சி தக்கோலம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் தலைமை நீரேற்றும் நிலையங்களை பராமரிக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் மாவட்ட ஆட்சியர் இராணிப்பேட்டை அவர்கள் 202 4–2025ம் ஆண்டுக்கான நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் தற்காலிக பணியாளர்களை கொண்டு 2025–26 ஆம் ஆண்டுக்கு தலைமை நீரேற்றும் நிலையங்களை இயக்கவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், கீழ்காணும் விவரப்படி மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், குடிநீர், பணியின் அவசியம் கருதியும், மேற்படி வேலைக்கும் பணிக்கான தொகையினை பொதுநிதி /குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தக்கோலம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையத்தில் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் 9 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் 2 மின் பணியாளர்கள் நியமித்து குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 15.00 |

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். 221 /இ1/2025) 677**

**<u>பொருள் எண். 9</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் வால்வு ஆப்ரேட்டர் பணியாளர்கள் இந்நகராட்சியில் போதிய அளவில் இல்லாத காரணத்தினால் மாவட்ட ஆட்சியர் இராணிப்பேட்டை அவர்களின் 2024–2025ம் ஆண்டுக்கான நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் தற்காலிக பணியாளர்களை கொண்டு 2025–26 ஆம் ஆண்டுக்கு தலைமை நீரேற்றும் நிலையங்களை இயக்கவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், கீழ்காணும் விவரப்படி மதிப்பீடு ரூ.15.00 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், குடிநீர், பணியின் அவசியம் கருதியும், மேற்படி வேலைக்கும் பணிக்கான தொகையினை பொதுநிதி /குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் 6 வால்வு ஆப்ரேட்டர், 4 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் 2 மின் பணியாளர்கள் ஆகியோர் வெளிக்கொணர்வு முகமையின் மூலம் நியமனம் செய்து குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 15.00 |

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.222/இ1/2025) 678**

**<u>பொருள் எண். 10</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான 3 எண்ணிக்கை ஈப்பு வாகனங்களான ஆணையர் ஈப்பு வாகனம், நகரமன்ற தலைவர் ஈப்பு வாகனம், பொறியாளர் ஈப்பு வாகனம்

மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் (ஹைட்ராலிக் லேடர்), ஜெட்ராடிங் (பாதாள சாக்கடை) 2 எண்ணிக்கை Cesspool டேங்கர் லாரி மற்றும் JCB ஆகிய வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், 2025–26 ஆம் ஆண்டிற்கு காப்பீட்டு உரிமம், தகுதி சான்று பெறுதல், சாலை வரிகள், பசுமை வரி ஆகியவைகளை செலுத்த தோராய செலவினம் ரூ.15.00 இலட்சம் வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.224/இ1/2025)** 679

**<u>பொருள் எண். 11</u>**

அரக்கோணம் நகராட்சியின் 2025–26ஆம் நிதியாண்டிற்கு கீழ்கண்ட செலவினங்களுக்கு வருவாய்நிதியின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1) தினசரி நாளிதழ்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி வரிவசூல் ,ஏலம் , இதர (ம) அரசின் திட்டங்கள் , நகராட்சி தொடர்புடைய விளம்பரங்களை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலக மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் வெளியீடு செய்வதற்கான கட்டணங்கள்.
2) நகராட்சி சார்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கான அனுமதிக்கப்பட்ட வழக்கறிஞர் கட்டணம் செலுத்துதல்.
3) இந்நகராட்சி ஆணையர், பொறியாளர், மற்றும் இதர பணியாளர்கள் அலுவலக பணியின் காரணமாக வெளியூர் சென்று வருவதற்கும் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் பயணங்களுக்கான பயணப் பட்டிய வழங்குதல்.
4) பணியாளர்களுக்கான பண்டிகை முன்பணங்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் ,திருமணக்கடன் , இதர அத்தியாவசிய – நகராட்சி பங்கு தொகை முன்பணங்கள் வழங்குதல்.
5) நகராட்சி வரிவசூல் மற்றும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடம் தெரிவிக்க ஆட்டோ செலவினங்கள் (ம) மைக் விளம்பரக்கட்டணங்கள் மேற்கொள்ளுதல்.
6) தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்படும் பங்களிப்பு தொகைகள் செலுத்துதல்.
7) நகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் மேற்கொள்ளும் பயிற்சிக்கான கட்டணங்கள் (ம) செலவினங்கள் மேற்கொள்ளுதல்.
8) நகராட்சி நிர்வாக இயக்குநரகம் , சென்னை–28 மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் வேலூர் –12 அவர்களால் கோரப்படும் சில்லரை செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு : 2025–26 ஆம் ஆண்டிற்கான மேற்காணும் செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.223/2025/சி1) 680

**<u>பொருள் எண். 12</u>**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரக்கோணம் நகராட்சியில் உள்ள வீடுகள், காலி மனைகள் மற்றும் வணிக வளாகங்களில் கொசு புழுக்கள் உற்பத்தி ஆகாமல் கொசுப்புழு ஒழிப்பு மருந்தான Temiphos Emulsifiable 50% EC 100 லிட்டர்

விநியோகம் செய்தல் பணிக்கு 30.01.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விவரம் | உத்தேச மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | M/S Sri Sai Ram Enterprises Tiruvallur | M/S SRI Yoga Enterprises Tiruvallur |
|---|---|---|---|---|
| 1 | கொசுப்புழ ஒழிப்பு மருந்தான Temiphos Emulsifiable 50% EC 100 லிட்டர் விநியோகம் செய்தல். | 1.00 | ரூ.548/- + 18% GST ஒரு கிலோ | ரூ.560/- + 18% GST ஒரு கிலோ |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ள **M/S Sri Sai Ram Enterprises Tiruvallur** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.1030/எச்1/2024) 681**

**பொருள் எண். 13**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடுகள் , காலி மனைகள் மற்றும் வணிக வளாகங்கள் கொசு புழுக்கள் உற்பத்திக்கு ஏதுவாக உள்ள கலன்கள் , தேவையற்ற டயர்கள், உடைந்த பொருட்கள் அப்புறப்படுத்துதல் மேலும் தண்ணீர் தேக்கி வைக்க கூடிய கலன்கள் , கீழ்நிலை நீர் தேக்க தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கொசு புழுக்கள் உருவாகாமல் தடுக்கவும் தொடர்ந்து கண்காணிக்கவும் , மேலும் காய்ச்சல் கண்ட நபர்களின் விவரங்களை சேகரித்து நடவடிக்கை மேற்கொள்ளவும் 07.10.2024 முதல் 05.01.2025 முடிய 46 நபர்கள் களப்பணியாளர்களை (DBC) மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு ஒப்பந்ததாரர் மூலமாக பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி ஒப்பந்ததாரர் M/S ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு நகர மன்ற தீர்மானம் எண் .570 நாள்.26.09.2024ல் அனுமதி அளிக்கப்பட்டு 36 நபர்கள் களப்பணியாளர்களை (DBC) கொண்டு 05.01.2025 அன்றுடன் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் 06.01.2025 முதல் 31.03.2025 வரை ஏற்கனவே அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்திலே பணியினை மேற்கொள்ள கொள்ளவும் , அதற்கான செலவின தொகை ரூ .11.10 இலட்சத்தில் மேற்கொள்ளவும், நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.483/2023/எச்1) 682**

**பொருள் எண். 14**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி **10** பள்ளிகள் மற்றும் **2** அரசுப் பள்ளிகளில் **2021-2022** ஆம் ஆண்டிற்கு கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் **(Outsourcing) 14** தற்காலிக பணியாளர்களை வைத்து பணியில் ஈடுபடுத்த 01.02.2021 முதல் 16.02.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு , மேற்காணும் பணி உத்திரவு 16.02.2022 முடிவடைந்துள்ளது.

அதனை தொடர்ந்து பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் 17.02.2022 முதல் .31**12.2024** வரை ஏற்கனவே அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்திலே பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதியுடன் தொடர் நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது . தற்போது பணி நீட்டிப்பு காலம் **31.12.2024** அன்று முடிவடையும் நிலையில் உள்ளதால் பணியின் அவசரம் அவசியம் கருதி பணி நீட்டிப்பு காலத்தை 01.01.2025 முதல் 31.03.2025 வரை மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே வழங்கி வரும் அதே **விலைப்புள்ளி விகிதத்தில்** அந்நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும் , அதற்கான செலவின தொகை ரூ .**3.50** இலட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள **ப்பட்டதை** மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.483/2023/எச்1) 683**

<u>பொருள் எண். 15</u>

அரக்கோணம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள நாய்கள் பயண வாகனம் மற்றும் கொசு ஒழிப்பு பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் கீழ்காணும் வாகனங்களுக்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெற 27.12.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **விவரம்** | **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி (GST 18% உட்பட)** | **வேலு மோட்டார் ஒர்க்ஸ் சென்னை – 42 (GST 18% உட்பட)** |
|---|---|---|---|
| 1 | TATA ACE TN73 AY1767 பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெற்று தருதல். | 134800/- | 140800/- |
| 2 | நாய்கள் பயண வாகனம் TN73 V9270 பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெற்று தருதல் | 124060/- | 128200/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.450/2022/எச்1) 684

<u>பொருள் எண். 16</u>

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் **2021-2022** ஆம் ஆண்டிற்கு கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் **(Outsourcing) 14** தற்காலிக பணியாளர்களை வைத்து பணியில் ஈடுபடுத்த 01.02.2021 முதல் 16.02.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு , மேற்காணும் பணி உத்திரவு 16.02.2022 முடிவடைந்துள்ளது. அதனை தொடர்ந்து பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும்

வரை ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் 17.02.2022 முதல் .31**03.2025** வரை ஏற்கனவே அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்திலே பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதியுடன் தொடர் நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது . தற்போது பணி நீட்டிப்பு காலம் **31.03.2025** அன்று முடிவடையும் நிலையில் உள்ளதால் பணியின் அவசரம் அவசியம் கருதி பணி நீட்டிப்பு காலத்தை 01.04.2025 முதல் 30.06.2025 வரை மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே வழங்கி வரும் அதே விலைப்புள்ளி விகிதத்தில் அந்நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும் , அதற்கான செலவின தொகை ரூ .**3.50** இலட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.483/2023/எச்1) 685

**<u>பொருள் எண். 17</u>**

அரக்கோணம் நகராட்சி 36 வார்டுகளுக்குடப்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மழைநீர் தேங்கிய இடங்களில் மழைநீரை அப்புறப்படுத்திய பின்னர் தொற்று நோய் ஏற்படா வண்ணம் கிருமி நாசினிகள் தெளித்து நடவடிக்கை மேற்கொள்ள பிளிச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு தூள் தேவையான அளவில் வாங்கி இருப்பில் வைக்க இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து பொது சுகாதார பணிகளின் அவசியத்தை கருதி கீழ்குறிப்பிட்ட அளவுகளின்படி அரசு அங்கீகாரம் பெற்ற விப்கோ, வேலூர் கூட்டுறவு அங்காடியில் பெற்றுகொள்ளவும் மற்றும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | கிருமிநாசினி விவரம் | தேவைபடும் அளவு |
|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு தூள் | 5000 கிலோ |
| 2. | பிளிச்சிங் பவுடர் | 2000 கிலோ |

அலுவல குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1278/எச்1/2023) 686

**<u>பொருள் எண். 18</u>**

அரக்கோணம் நகராட்சி பகுதியில் இயங்கி வரும் நகராட்சி அரசு நடுநிலை மற்றும் தொடக்கப்பள்ளிகளில் படிக்கும் மணவர்கள் வாசிப்பு திறன் அதிகரிக்கவும், நாட்டு நடப்பு மற்றும் அரசின் திட்டங்கள் தெரிந்துக்கொள்ளும் வகையில் ஒவ்வொரு பள்ளிக்கும் விடுறை நாட்கள் தவிர்த்து பள்ளிவேளை நாட்களில் தலா இரண்டு தினகரன் நாளிதழ்கள் வழங்க மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஏற்கனவே வழங்கிய கடிதத்தின்படி அறிவுறுத்தியவாறு அனைத்து பள்ளிகளுக்கும் தினகரன் நாளிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. இது குறித்து அனைத்து பள்ளி அசிரியர்களும் உறுதிப்படுத்தும்படி, இவ்வலுவலகத்திற்கு கடிதம் அளித்துள்ளனர், எனவே பள்ளிகளுக்கு ஜனவரி 2024 to டிசம்பர் 2024 வரை 10 (20x1000) மொத்த தொகை 20,000/- வழங்க தினகரன் அலுவலகம் சார்பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்

ந,க,எண்952/2023/பி2 687

**<u>பொருள் எண். 19</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2024-25ஆம் ஆண்டின் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.அ/45101202/4 நாள் : 02.01.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கீழ்காணும் பணிக்கு 07.02.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் மன்றத்தின் பார்வைக்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக ஒப்பந்தப்புள்ளி |
| **1** | அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 8ல் பேருந்து நிழற்குடை கட்டும் பணி. | **8.00** | **JPM ENTERPRISES** | 7,78,067 | **V,சதீஷ்குமார்** | 8,03,001 |
| **2** | அரக்கோணம் நகராட்சி வார்டு எண் 21ல் நியாய விலைக்கடை கட்டடம் கட்டும் பணி. | **14.00** | **V,சதீஷ்குமார்** | 13,78,645 | - | - |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.946/2025/இ1) 688

**<u>பொருள் எண். 20</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2024-25ஆம் ஆண்டின் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.அ/45101202/4 நாள் : 17.02.2025.ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கீழ்காணும் பணிக்கு 06.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் மன்றத்தின் பார்வைக்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக ஒப்பந்தப்புள்ளி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 10ல் உள்ள லாசர் தெருவில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | **2.10** | **விஜய கீர்த்தி** | 2,05,659 | **K.முனுசாமி** | 2,06,259 |
| 2 | அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 10ல் உள்ள ஜாபர் மஸ்தான் தர்கா தெருவில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | **2.10** | **விஜய கீர்த்தி** | 2,05,659 | **K.முனுசாமி** | 2,06,259 |
| 3 | அரக்கோணம் ,0நகராட்சியில் வார்டு எண் 10ல் உள்ள நன்னுமியான் சாய்பு தெருவில் கல்வெட்டு கட்டும் பணி. | **2.00** | **விஜய கீர்த்தி** | 1,91,076 | **K.முனுசாமி** | 1,91,606 |
| 4 | அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 34ல் உள்ள முத்தப்பன் தெருவில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | **2.10** | **K.முனுசாமி** | 2,05,659 | **P.R.V. ENTERPRISES** | 2,06,259 |
| 5 | அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 10ல் உள்ள ஜாபர் மஸ்தான் தர்கா தெருவில் கல்வெட்டு கட்டும் பணி. | **2.00** | **விஜய கீர்த்தி** | 1,91,076 | **K.முனுசாமி** | 1,91,606 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.0083/2025/இ1) 689

**<u>பொருள் எண். 21</u>**

அரக்கோணம் நகராட்சியில் அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள், வளர்ச்சி பணிகள் குறித்து பொங்கல் தினத்தையொட்டி தினகரன் நாளிதழியில் சிறப்பு மலர் வெளியிட இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்ட கடித ந.களண் 124/செமதொ/2024 நாள்:30-12-2024 கடிதம் வரப்பெற்றுள்ளது. மேலும் தினகரன் நாளிதழியில் 14-01-2024 அன்று அரக்கோணம் நகராட்சி சார்பில் மக்களுக்கு பொங்கள் வாழ்த்துக்கள் மற்றும் அரசு சாதனை திட்டங்கள் வெளியிட்டப்பட்டது. எனவே Kal Publication (p) LTD அலுவலகம் சார்பில் வரப்பெற்றுள்ள பட்டியல் தொதை 28,942/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்

ந,க,எண்952/2023/பி2 690

**<u>பொருள் எண். 22</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 1076/2023.அ3 நாள் 10.122024ல் தூய்மை இந்தியா திட்டம் 2 .0 (நகர்ப்புறம்) Safaimitra Suraksh

Sheher தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு வேலூர் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் உள்ள 24 X7 தொலைபேசி உதவி மையத்திற்கு தேவையான பணியாட்கள் வெளிக்கொணர்வு முககை அடிப்படையில் நியமித்தது. ஆண்டு பராமரிப்பு தொகை மற்றும் பணியாளர்களுக்கான ஊதியம் வழங்கும் பொருட்டு நகராட்சிகளின் வாரியாக தொகை நிர்ணயம் செய்து செலுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி அரக்கோணம் நகராட்சிக்கு ரூ.33,068/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை பணியின் அசவர அவசியம் கருதி உடன் செலுத்த கோரப்பட்டுள்ளது. எனவே நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் செலவினத்தொகை ரூ.33,068/- வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கு நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ரூ.33,068/- வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3929/2024/பி2) 691

**<u>பொருள் எண். 23</u>**

புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல, 2025 ஆம் ஆண்டிற்கான புத்தகக் திருவிழா நடத்திட 1) அரசாணை நிலை எண்.119 பள்ளிக்கல்வித் ( பொ.நூ.2) துறை நாள்: 30.06.2024 2) அரசாணை நிலை எண். 130 பள்ளிக்கல்வித்(பொதூ 2) துறை நாள்:25.07.2024 3) அரசாணை நிலை எண்.205, பள்ளிக்கல்வித்(பொ.நூ.2) துறை நாள் : 18.09.2024 மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந .க.எண்.அ5/967/2025 நாள் 26.02.2025. ஆகிய அரசாணைகளில் தெரிவித்துள்ளவாறு புத்தக திருவிழா நடத்துவதற்கான நிதி ஆதாரங்களை கொடையாளர்களிடமிருந்து பெறப்படும் நிதி. விளம்பரதாரர் மூலம் பெறப்படும் நிதி மற்றும் அரசின் பிற துறை சார்ந்த நிதியினையும் கண்டறிந்து பயன்படுத்தலாம் என வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டுள்ளதன் அடிப்படையில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் மூன்றாவது ஆண்டாக எதிர் வரும் 28.02.2025 முதல் 09.032025 வரை புத்தகத் திருவிழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந .க.எண்.அ5/967/2025 நாள் 26.02.2025 ல் அரக்கோணம் நகராட்சிக்கு பங்களிப்பு தொகை ரூ.2,00,000/-நிர்ணயம் செய்து கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது . அதன் பிறகு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தொலைபேசி தகலில் அரக்கோணம் நகராட்சிக்கு பங்களிப்பு தொகை ரூ.50,000/-செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

1) வங்கி கணக்கின் பெயர் BOOK FAIR ACCOUNT
   DISTRICT COLLECTOR, RANIPET DISTRICT.
2) வங்கி கணக்கு எண் 7306256587.
3) INDIAN BANK RANIPET IND.COMPLEX
4) IFSC Code: IDIB000R036

எனவே அரக்கோணம் நகராட்சிக்கு நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு தொகை ரூ.50,000/-யினை 2024-25 ஆம் ஆண்டிற்கான கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.158/2025/இ1) 692

**<u>பொருள் எண். 24</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளிலும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 3 எண்ணிக்கை Oil Engine பழுதுகளை பொதுமக்களின் நலன் கருதி உடன் சரிசெய்யவும் , பணியின் அவசர அவசியம் கருதியும், மேற்படி பணிக்கான விலையினை பொதுப்பணி துறையால் 2024-25 ஆம் ஆண்டுக்கு நிர்ணயம் (SOR) செய்யப்பட்ட விலையில் ரூ.1.00 இ லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.C.பத்மநாபன், என்பவரின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)-ன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவினத்தொகை ரூ.99,448/- வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.915/2024/இ1) 693

**<u>பொருள் எண். 25</u>**

அரக்கோணம் நகராட்சியில் இயங்கி வரும் மாலை மலர் வேலூர் அவர்களின் கடிதம் வரபெற்றள்ளது, விளம்பர புத்தகத்தில் தீபாவளி பண்டிகையின் முன்னிட்டு அரக்கோணம் நகராட்சி சார்பில் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்கள் அதன் விவரம் பெறப்பட்டுள்ளது மாலை மலர் அலுவலகம் சார்பில் வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை 9,975/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந,க,எண்952/2023/பி2 694

**<u>பொருள் எண். 26</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் .09 அம்பேத்கர்நகரில் அமைந்துள்ள கழிப்பறையில் உள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு முற்றிலும் பழுது ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும் , பணியின் அவசர அவசியம் கருதியும் , உடனடியாக புதிய ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான விலையினை பொதுப்பணி துறையால் 2024-25 ஆம் ஆண்டுக்கு நிர்ணயம் (SOR) செய்யப்பட்ட விலையில் ரூ.1.50 இ லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.C.பத்மநாபன், என்பவரின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)-ன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவினத்தொகை ரூ.1,47,895/- வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.924/2024/இ1) 695

**<u>பொருள் எண். 27</u>**

அரக்கோணம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக மழையால் ஏற்பட்ட இடர்பாடுகளை உடன் சரி செய்ய ஏதுவாக மழைநீரை அகற்ற Sludge Motor for dewatering Pump and Cable, மற்றும் மின்விளக்குகள் சப்ளை செய்ய பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கோரி பொதுப்பணி துறையால் 2024-25 ஆம் ஆண்டுக்கு நிர்ணயம் (SOR) செய்யப்பட்ட விலையில் ரூ.1.50 இ லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதனை

தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு. K.முனுசாமி, என்பவரின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் , 1998 பிரிவு 57 (7)–ன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவினத்தொகை ரூ .1,49,629/– வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.925/2024/இ1) 696

**<u>பொருள் எண். 28</u>**

அரக்கோணம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண். 28 சோமசுந்தரம் நகர் நகராட்சி பள்ளியில் Aluminium Partition அமைத்து Smart Class வகுப்பறை ஏற்படுத்தி தருதல் மற்றும் அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள பொறியியல் பிரிவிற்கு கோப்புகள் வைக்க CupBoard அமைக்க பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கோரி பொதுப்பணி துறையால் 2024–25 ஆம் ஆண்டுக்கு நிர்ணயம் (SOR) செய்யப்பட்ட விலையில் ரூ .0.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது . அதனை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு. K.முனுசாமி, என்பவரின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் , 1998 பிரிவு 57 (7)–ன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவினத்தொகை ரூ .89,882/– வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.005/2025/இ1) 697

**<u>பொருள் எண். 29</u>**

அரக்கோணம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண் .01 ஜெய்பீம் நகர் (காந்தி ரோடு) பகுதியில் குடிநீர் பைப் லைன் பாப்பான்குட்டை அருகில் உள்ள பெரிய கால்வாய் பகுதியில் உடைப்பு ஏற்பட்டது. இதனால் அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் பாதிகப்பட்டுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி புதிய குடிநீர் பைப்லைன் அமைந்து குடிநீர் விநியோகத்திற்கான குழாய் பதித்தல் பணியினை குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கோரி பொதுப்பணி துறையால் 2024–25 ஆம் ஆண்டுக்கு நிர்ணயம் (SOR) செய்யப்பட்ட விலையில் ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது . அதனை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு. K.முனுசாமி, என்பவரின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் , 1998 பிரிவு 57 (7)–ன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவினத்தொகை ரூ .96,579/– வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.035/2025/இ1) 698

**<u>பொருள் எண். 30</u>**

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட டிபி ரோடு. சர்வே வார்டு – D. பிளாக் எண் – 9. நகரளவு எண் –1 , சர்வே ஆவணங்களின் படி நகராட்சி குடியிருப்பு வீடுகள் எனப்பதிவாகியுள்ளது. மேற்கண்ட இடத்தின் பழைய சர்வே எண். 45/1 என பதிவாகியுள்ளது. மேற்கண்ட இடத்தின் விஸ்தீரனம் 2400 சதுர மீட்டர் ஆகும். இந்த 2400 சதுர மீட்டர் இடத்தில் மத்திய அரசின் குறைந்த வருவாய் திட்டத்தின் கீழ் அரக்கோணம் நகராட்சி நிதியிலிருந்து 20 வீடுகள் கட்டப்பட்டது. மேற்கண்ட வீடுகள் 1958 ஆம் ஆண்டு

கட்டப்பட்டுள்ளது. அந்த வீடுகளை முன்னாள் முதல்வர் அமரர் காமராஜ் அவர்களால் 21:10:1958 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.இவ்வீடுகள் முழுமையாக நகராட்சியில் பணிபுரியும் குறைந்த வருமானம் உள்ள பணியாளர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கு கட்டப்பட்டு ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட வீடுகளில் தற்போது அதிக வருமானம் உள்ளவர்களும். பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் , இந்நகராட்சியிலிருந்து பணி மாறுதலாக போனவர்களும் , பிற துறைகளில் பணியில் உள்ளவர்களும் குடியிருந்து வருகின்றனர் இவர்கள் அனைவரும் சட்டத்தின் படி ஆக்கிரமிப்பாளர்களாகும். தற்போது அரக்கோணம் நகராட்சியின் தரம் உயர்த்தப்பட்டதன் காரணமாக நகராட்சி பணியாளர்கள் அதிக அளவில் உள்ளார்கள் அதன் காரணத்தால் குறைந்த வருவாய் உள்ள பணியாளர்கள் அதிகமாக உள்ளார்கள். இவர்களை வாடகை அடிப்படையில் குடியமர்த்துவதற்கு முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது . எனவே கட்டிடங்கள் சுமார் 65 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கட்டிடமாக இருப்பதாலும் , கட்டிடங்களும் மிகவும் பழுதடைந்த கட்டிடமாக உள்ளதாலும் மேற்கண்ட வீடுகளில் குடியிருக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது இடிந்து விடும் சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்க்கண்ட பழுதடைந்த வீடுகளில் குடியிருக்கும் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றிவிட்டு பழமையான கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தலாம் . மேற்கண்ட இடத்தில் நகராட்சி நிதியின் மூலம் புதிய வீடுகள் கட்டப்பட்டு நகராட்சி பணியாளர்களுக்கு வாடகை அடிப்படையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யலாம். மேற்கண்ட பழமையான கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கான செலவுத்தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

( ந.க.எண்:7039 /1997/எப்1) 699

<u>**பொருள் எண். 31**</u>

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத குடியிருப்பு (ம) குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு ஒற்றைச்சாளர இணைய முகப்பில் ( Single Window Portal) கட்டட உரிமம் பெறுவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ள அரசாணை (ப) எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள். 05.02.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்: 1675/2019/டிபி2 நாள்:13.02.2025 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : அ) மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) அட்டவணை 2–

| **நகராட்சிகள் குடியிருப்பு :கட்டுமானங்கள்கட்டண விபரம் –** | | | | |
|---|---|---|---|---|
| **சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத குடியிருப்பு கட்டடங்கள் ( கட்டிட பரப்பளவு 3500 சதுரஅடிக்குமேல் )** | | | **ஒருங்கிணைந்த கட்டணம்** | |
| **வ. எண்.** | **நகராட்சியின்நிலை** | **எண்ணிக்கை** | **ரூ / ஒரு சமீ.** | **ரூ/சதுர அடி** |
| 1. | சிறப்பு நிலை நகராட்சிகள் | 13 | 800 | 74 |
| 2. | தேர்வு நிலை நகராட்சிகள் | 28 | 800 | 74 |
| 3. | நிலை–I நகராட்சிகள் | 31 | 750 | 70 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | நிலை – II நகராட்சிகள் | 65 | 750 | 70 |
| | | 137 | | |

மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு அட்டவணை –2 வ . எண். 3 இல் உள்ள ரூ . 750 / – சதுர மீட்டர் (ரூ.70 / – சதுரடி) என அரக்கோணம் நகராட்சியில் 3500 சதுர அடிக்குமேல் கட்டப்படும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டணம் நிர்ணயம் செய்யபட்டுள்ளது. என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

இ) இதர குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு ஒற்றைச்சாளரஇணைய முகப்பில் ( Single Window Portal ) கட்டட உரிமம் பெறுவதற்க்கு மேற்கண்டவாறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டணங்களை விட 125% (1.25 மடங்கிற்கு) குறையாமல் இருக்குமாறு நிர்ணயம் செய்து மன்றம் முடிவு செய்யலாம். என தெரிவிக்க பட்டுள்ளது.

**<u>அட்டவணை –4</u>**

| **நகராட்சிகள்கட்டண விபரம்–குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களின் :** | | | | |
|---|---|---|---|---|
| (எந்த அளவிலான கட்டிட பரப்பளவிற்கும்) | | ஒருங்கிணைந்த கட்டணம்( மடங்கு 1.25) – | | |
| **வ. எ** | **நகராட்சியின்நிலை** | **எண்ணிக்கை** | **ரூ / ஒரு சமீ.** | **ரூ/சதுரஅடி** |
| 1 | சிறப்புநிலைநகராட்சிகள் | 13 | 1000 | 93 |
| 2 | தேர்வுநிலைநகராட்சிகள் | 28 | 1000 | 93 |
| 3 | நிலை–I நகராட்சிகள் | 31 | 938 | 87 |
| 4 | நிலை – II நகராட்சிகள் | 65 | 938 | 87 |
| | கூடுதல் | 137 | | |

அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டண வழிகாட்டுதலின்படி சுய சான்றளிப்பு வரையறைக்கு உட்படாத குடியிருப்பு கட்டுமானங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டணத்தில் 1.25 மடங்கு என்ற விகிதத்தில் மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வரிசை எண். 03 ல் உள்ள ரூ. 938 /– சதுர மீட்டர் ( ரூ. 87 /– சதுரடி ) என்ற அடிப்படையில் அரக்கோணம் நகராட்சியில் குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டுமானங்களும் கட்டிட உரிமம் வழங்கும் நிகழ்வில் மேற்கண்ட ஒருங்கிணைந்த கட்டணங்களை வசூல் செய்து கொள்ள மன்றம் முடிவு செய்யலாம்.

ஈ) வசூலிக்க பட வேண்டிய பாதாளசாக்கடைத்திட்ட வைப்புத் தொகை இணைப்பு ஒன்றுக்கு

| | | |
|---|---|---|
| 1 | **3500 சதுரடிக்குகீழ்** | |
| | I.குடியிருப்பு கட்டிடங்களுக்கு | ரூ–/ 7500. |
| | II.குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | ரூ–/ 15,000. |
| 2 | **3501–10,000 சதுரடிக்கு** | |
| | I.குடியிருப்பு கட்டிடங்களுக்கு | ரூ –/ 10000. |
| | II.குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | ரூ –/ 20,000 . |
| 3 | **10,000 சதுரடிக்குமேல்** | |
| | I.குடியிருப்பு கட்டிடங்களுக்கு | ரூ –/ 20,000 . |
| | II.குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | ரூ –/ 40,000 . |

மேலும் மேற்கண்ட பாதாளத்திட்ட வைப்புத் தொகை இணைப்பு ஒன்றக்குரிய கட்டணங்களையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண். 157/2025/எப்1 )

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

700

**<u>சாதாரண கூட்ட எண் 36 நாள். 26.03.2025</u>**
**<u>கூட்டத்தின் போது கொண்டு வரப்பட்ட மன்றப்பொருள்</u>**

**<u>பொருள் எண். 32</u>**

**<u>நகரமன்ற தலைவர் திருமதி.லட்சுமி பாரி அவர்களால் கொண்டு வரும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம்</u>**

தமிழக சட்டசபையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கையில் தமிழகத்தில் 21 நகராட்சிகள், 4 மாநகராட்சிகளில் என மொத்தம் 704.76 கோடியில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது . இதில் அரக்கோணம் நகராட்சிக்கு குடிநீர் திட்ட பணிக்காக ரூ.60.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கிய **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் துறை அமைச்சர், திரு,கே.என்.நேரு, அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், அண்ணன் திரு .ஆர்.காந்தி அவர்களுக்கும் , தங்க தளபதியார் மாண்புமிகு முதலமைச்சர் திரு .மு.க.ஸ்டாலின், அவர்களுக்கும்**, இந்நகரமன்றம் சார்பாக எங்களது கோடானு கோடி நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்

**<u>பொருள் எண். 33</u>**

அரக்கோணம் நகராட்சியில் துய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திரவ கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் புதியதாக கழிவுநீர் அகற்று வாகனம் 2 எண்ணிக்கை கொள்முதல் செய்யப்பட்டதன் , அடிப்படையில் பாதாளச் சாக்கடை அமைப்பு இல்லாத இடங்களில் உள்ள வீடுகளில் உள்ள நச்சு தொட்டியிலிருந்து கழிவுநீர் அகற்ற மேற்படி வாகனத்தை பயன்படுத்தி கொள்ளவும் , அவற்றுக்கான கட்டணமாக ரூ. 1500/−ஐ பெற்று , கழிவுநீர் அகற்றும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்க ஆணையர் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

**நகரமன்ற தலைவர்**
**அரக்கோணம் நகராட்சி**